பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 05 2026 WEDNESDAY 6:30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆனைமங்கல செப்பேடுகளை மீட்டதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் திரு. விஜய் நன்றி தெரிவித்துள்ளார்.

2. மக்கள் நலனுக்காக மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. அஇஅதிமுக அதிருப்தி சட்டப்பேரவை உறுப்பினர்கள், அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து ஓரணியில் செயல்படுவதாக அறிவித்துள்ளனர்.

5. உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் Esha Singh இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழக முதலமைச்சர் திரு. விஜய், பிரதமர் திரு. நரேந்திர மோடியை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின் போது, ஆனைமங்கல செப்பேடுகளை இந்தியாவிற்கு கொண்டு வந்ததற்காக பிரதமருக்கு அவர் நன்றி தெரிவித்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் மாநில வாழ்த்துப் பாடலை பாடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் கேட்டுக் கொண்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வான்வழி அமைப்பு மையத்தினை தமிழகத்தில் அமைக்க வேண்டும், மேகதாது அணை கட்டும் திட்டத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது போன்ற கோரிக்கைகளையும் முதலமைச்சர் வலியுறுத்தியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை சிறையில் உள்ள 58 தமிழக மீனவர்களையும், 266 படகுகளையும் மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு. விஜய், பிரதமரிடம் வலியுறுத்தியதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி ஆண்டார்குப்பத்தில் பிஜேபி சார்பில் இன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசின் சாதனைகளை பிஜேபி தொண்டர்கள் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

பல்கலைக் கழகங்களின் வேந்தராக முதலமைச்சரே இருப்பார் என்ற திமுக அரசின் நிலைப்பாட்டை பின்பற்ற வேண்டிய கட்டாயம் த.வெ.க. அரசுக்கு இல்லை என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர். இதுதொடர்பாக முதலமைச்சர் திரு. விஜய் கொள்கை முடிவு ஒன்றை எடுப்பார் என்றும் கூறினார்.

மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினையில் முதலமைச்சர் மேற்கொள்ளும் நிலைப்பாட்டிற்கு, காங்கிரஸ் கட்சி உறுதுணையாக இருக்கும் என்றும் திரு. விஸ்வநாதன் கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 28 கொலைச் சம்பவங்கள், 40 பாலியல் குற்றங்கள் நடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பிற கட்சிகளுக்குள் புகுந்து குதிரைபேரம் நடத்துவதில் மட்டும் கவனம் செலுத்திக் கொண்டு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பில் த.வெ.க. அரசு கோட்டை விட்டுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

அஇஅதிமுக அதிருப்தி சட்டப்பேரவை உறுப்பினர்கள், அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியுடன் இணைந்து ஓரணியில் செயல்படுவதாக அறிவித்துள்ளனர்.

இன்று சென்னையில் திரு. எடப்பாடி பழனிசாமியை சந்தித்த பின், இருதரப்பும், பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகரை சந்தித்து இதற்கான கடிதத்தை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. எஸ்.பி. வேலுமணி, அஇஅதிமுகவிற்குள் கருத்து வேறுபாடுகள் தான் நிலவியதாகவும், பிளவு ஏதுமில்லை என்றும் கூறினார்.

தற்போது அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டப்பேரவை அஇஅதிமுக குழுத் தலைவராக திரு. எடப்பாடி பழனிசாமியே செயல்படுவார் என்பதற்கான கடிதமும் பேரவைத் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ளதாக திரு. எஸ்.பி. வேலுமணி கூறினார்.

இதற்கிடையே, அஇஅதிமுக சார்பில் பெறப்பட்ட மனுக்கள் தொடர்பாக, நாளை தமது முடிவினை அறிவிக்கவுள்ளதாக திரு. ஜே.சி.டி. பிரபாகர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

>>>>><<<<<

அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் 4 பேரை ராஜினாமா செய்ய வைத்து, அவர்களை த.வெ.க.வில் இணைத்தது ஜனநாயக படுகொலையாகும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க அரசின் இந்த செயலை மக்கள் விரும்பவில்லை என்று கூறினார்.

குதிரைபேரத்தை விட மோசமானது இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது, வாக்களித்த தொகுதி மக்களின் தீர்ப்புக்கு எதிரான செயலாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தலில் பதவியை ராஜினாமா செய்தவர்கள், போட்டியிட்டால் படுதோல்வி அடைவார்கள் என்று அவர் கூறினார்.

தேவைப்பட்டால் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளரை நிறுத்தும் சூழல் ஏற்படும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் எச்சரித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>><<<<<

ஏழைகளின் வீட்டுவசதிக் கனவை நிறைவேற்றுவதில் பிரதமரின் வீட்டு வசதி திட்டம் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

இந்த திட்டத்தின் மூலம், சொந்தமாக வீடு கட்ட வேண்டும் என்ற தமது கனவு நனவாகியுள்ளதாக செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

>>>>><<<<<

கொடைக்கானல் நட்சத்திர ஏரியில் படகு அலங்கார போட்டி இன்று நடைபெற்றது.

சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற இந்த போட்டியை சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கண்டு ரசித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

சென்னை மத்திய கூட்டுறவு அச்சகத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், கழிவறை வசதிகளை ஏற்படுத்துவது உள்ளிட்ட 47 தீர்மானங்கள் மாமன்றக் கூட்டத்தில் இன்று நிறைவேற்றப்பட்டன.

>>>>><<<<<

திருச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு. டோங்கரே பிரவின் உமேஷ் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>><<<<<

வைகாசி விசாகத்தை ஒட்டி, சென்னை – திருச்செந்தூர் இடையே அதிவிரைவு சிறப்பு ரயில் வரும் 29ஆம் தேதி இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் இந்த ரயில் திருச்செந்தூரிலிருந்து 30ஆம் தேதி புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் ஈசா சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியின் Munich-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் 25 மீட்டர் பிரிவு தகுதிச் சுற்றில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையி அவர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 10-21, 21-12, 21-18 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Jonatan Christie-யை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் Tanisha Crasto - Dhruv Kapila இணை, 21-14, 20-22, 21-13 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Wong Tien Ci – Lim Chiew Sien இணையை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

>>>>>END<<<<<